# மாலை முரசு

பக்கங்கள் 15+6

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆடி 25 சனிக்கிழமை 10.08.2024 | அதிர்வு 09


## வவுனியாவில் இளைஞரை கடத்திக் கொடூர தாக்குதல்!

### ஏழு பேர் கைது

(கே.வசந்தன்)

வவுனியாவில் இளைஞர் ஒருவர் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் மூன்று மோட்டர் சைக்கிள்கள் மீட்கபட்டுள்ளதுடன், 04


'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# நல்லாட்சியில் இடையில் விட்ட அரசமைப்பை தொடருவோம்!

## இன்று சுமந்திரனிடம் நாமல் யோசனை

## தமிழரசுடன் யாழ். சென்று பேசவும் முடிவு

நல்லாட்சி அரசின் காலத்தில் முழு நாடாளுமன்றமுமே அரசமைப்புப் பேரவையாக மாறி உருவாக்கிய புதிய அரசமைப்பு வரைவுத் திட்டத்தை தொடர்ந்து முன்னெடுப்பது குறித்து ஆராயலாம் என்ற யோசனைத் திட்டத்தை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ இன்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பிரமுகர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பியிடம் நேரில் தெரிவித்தார்.

இன்று முற்பகல் கொழும்பில் சுமந்திரனின் இல்லத்தில் அவரைக் மொட்டுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷவும், கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவாசமும் நேரில் சென்று சந்தித்துப் பேசினர். சுமார் ஒரு மணி நேரம் இந்தக் கலந்துரையாடல் நீடித்தது.



## தமிழ்ப் பொது வேட்பாளர் தரப்பினருடன் நேரில் சந்திப்பு நடத்த ரணில் அழைப்பு

வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளரைக் களமிறக்கும் தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்புடன் சந்திப்பு நடத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார்.

எதிர்வரும் 15ஆம் திகதி மாலை 5 மணிக்கு சந்திப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் கூட்டணி, ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ்., தமிழ்த் தேசியக் கட்சி உள்ளிட்ட கட்சிகளுக்கும், சிவில் சமூகம் என்ற பெயரில் இயங்கும் 7 தனிநபர்களுக்கும் இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.







# ‘சிவகங்கை’ வெள்ளோட்டம்






தமிழ்நாடு நாகப்பட்டினத்துக்கும் இலங்கையின் காங்கேசன்துறைக்கும் இடையில் பயணிகள் சேவையை முன்னெடுக்கும் ‘சிவகங்கை’ கப்பல் இன்று தனது வெள்ளோட்டப் பயணத்தை மேற்கொண்டது.

இன்று காலை நாகப்பட்டினத்தில் இருந்து புறப்பட்ட சிவகங்கை இன்று முற்பகலில் காங்கேசன்துறையை வந்தடைந்தது.

கப்பலில் பத்து கப்பல் பணியாளர்களும் எட்டு அதிகாரிகளும் தமிழகத்திலிருந்து வந்தனர்.

பிற்பகலில் அது மீண்டும் நாகப்பட்டினத்திற்கு புறப்படத் தயாராக இருந்தது.

நாளை தொடங்கும் புதிய வாரத்தில் இந்தச் சேவை பெரும்பாலும் ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

15,16 ஆம் திகதியை ஒட்டி முதல் சேவை தொடங்கலாம் என விடயம் அறிந்த வட்டாரங்கள் கோடி காட்டின.



# குடியிருப்புக் காணிகளை அபகரிக்கவே வேண்டாம்!

## கப்பல்துறை பிரதேச மக்கள் ஆர்ப்பாட்டம்

**(ஏ.எச். ஹஸ்பர்)**

திருகோணமலை மாவட்டம், பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கப்பல்துறைப் பகுதியில் உள்ள மக்கள் தங்கள் காணிகளை அபகரிக்க வேண்டாம் எனக் கோரி இன்று கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்தில் பல நூற்றுக் கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.

போராட்டக்காரர்கள் அல்அக்சா ஜும் ஆ பள்ளிவாசலுக்கு முன்னால் இருந்து அஷ்ரப் நகர் வயல் வீதி வரை பேரணியாகச் சென்றனர்.

"வேண்டாம் வேண்டாம் காற்றாலை மின் உற்பத்தி நிலையம் வேண்டாம், எங்களுடைய விவசாய காணிகள் எங்களுக்கு வேண்டும்" போன்ற வாசகங்களை ஏந்தியவாறும் அவர்கள் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.











# நிந்தவூர் விபத்தில் இருவர் படுகாயம்

(பாறுக் ஷிஹான்)

உழவு இயந்திரம் மற்றும் மோட்டார் சைக்கிள் மோதிய விபத்துச் சம்பவத்தில் இருவர் காயமடைந்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம், நிந்தவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அட்டப்பளத்துக்கும் தென்கிழக்கு பல்கலைக்கழக வளாகத்துக்கும் இடையே அமைந்துள்ள அக்கரைப்பற்று - கல்முனை பிரதான வீதியில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.



நெல் அறுவடை முன்னாயத்த பணியில் ஈடுபட்ட உழவு இயந்திரம் ஒன்று சடுதியாக பிரதான வீதியை நோக்கி இரு வழி சாலையை மறித்து திரும்ப முற்பட்ட வேளை மறுமுனையில் இருந்து வேகமாகப் பயணம் செய்த பல்சர் ரக மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது உழவு இயந்திரத்தைச் செலுத்திய சாரதி காலில் காயமடைந்துள்ளதுடன் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த இரு இளைஞர்களில் ஒருவருக்கு கை உடைவு ஏற்பட்டுள்ளது.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த நிந்தவூர் போக்குவரத்துப் பொலிஸார் விசாரணை மேற்கொண்டதுடன் விபத்தில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரையும் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**வவுனியாவில்...**

ஏழு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வவுனியா பொலிஸார் இன்று தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தாடெர்பில் மேலும் தெரியவருவதாவது,

கடந்த வியாழக்கிழமை அதிகாலை வவுனியா, பூந்தாடேட்டம் பகுதியில் வசிக்கும் இளைஞர் ஒருவரைக் காணவில்லை என வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

குறித்த முறைப்பாடு தொடர்பில் வவுனியா தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி ஜெயக்கொடியின் வழிகாட்டலில் உப பொலிஸ் பரிசோதகர் அகமட் தலைமையிலான பொலிஸ் குழுவினர் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதன்பாதே சந்தேகத்தின் பேரில் சில இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் பல்வேறு தகவல்கள் தெரியவந்துள்ளன.

வவுனியா, பூந்தோட்டம் பகுதிகளைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கடந்த புதன் கிழமை மாலை பூந்தோட்டம் பகுதியில் உள்ள தனது வீட்டில் தனது பிறந்தநாள் நிகழ்வைவெகுவிமர்சையாகக்கொண்டாடியுள்ளார்.

அந்த நிகழ்வுக்காக அங்கு உறவினர்கள், நண்பர்கள் எனப் பலர் வந்திருந்தனர். அங்கு வந்த அவரது சில நெருங்கிய நண்பர்கள் மது போதையில் இருந்துள்ளனர்.

இதன்பாதே, பிறந்தநாள் நிகழ்வைச் சிறப்பிப்பதற்காக நண்பர்கள், இளைஞர் குழுக்களாகப் பாட்டுப் பாடி நடனம் ஆடினார்கள்.

இந்த நேரத்தில் மதுபோதையில் இருந்த நெருங்கிய நண்பர்கள் பிறந்த நாள் நிகழ்வுக்காக வந்த பெண் நண்பிகளுடன்சேர்ந்து நடனமாட முற்பட்ட வேளை பிறந்தநாள் நண்பன் அதனை அனுமதிக்காது தடுத்துள்ளார்.

இதனால் நெருங்கிய நண்பர்கள் மற்றும் இளைஞர் குழுக்களுக்கிடையில் மோதல் ஏற்பட்டுள்ளது.

இதனை அங்கு இருந்த உறவினர்கள் சமரசம் செய்து வைத்துள்ளனர்.

அதன் பின்னர் மறுநாள் வியாழக்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர் குழு ஒன்று பிறந்தநாள் இளைஞரைக் கடத்திச் சென்று குட்செட் வீதியில் உள்ள கருமாரி அம்மன் கோயிலுக்கு அருகில் உள்ள பாழடைந்த வீட்டில் தனிப்பட்ட தகராறு காரணமாக இளைஞரை அடைத்து வைத்து கடுமையாக கொலைவெறித் தாக்குதல் நடத்தியுள்ளது.

குறித்த பாழடைந்த வீட்டில் இளைஞரை அடைத்து வைத்து விட்டு கடத்தியவர்கள் தப்பிச் சென்ற நிலையில், கடத்தப்பட்ட இளைஞரை மீட்டு அவரை வவுனியா மாவட்ட பொதுவைத்திய சாலையில் பாலெிஸார் சேர்த்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தாடெர்பில் 20 வயது தொடக்கம் 22 வயது வரையுள்ள 7 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதில் பட்டைகாடு பகுதியைச் சேர்ந்த 3 பேரும், வேப்பங்குளம் பகுதியைச் சேர்ந்த 2 பேரும், கோயில்புதுக்குளம் பகுதியைச் சேர்ந்த ஒருவரும், தோணிக்கல் பகுதியைச் சேர்ந்த ஒருவரும் உள்ளடங்கியுள்ளனர்.

அவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையின்போது கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட மூன்று மோட்டர் சைக்கிள்கள் மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட மாடேட்ர் சைக்கிள்களையும் கைது செய்யப்பட்ட இளைஞர்களையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று வவுனியா பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

**நல்லாட்சியில்...**

ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் என்ற முறையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உயர்மட்டத்தினருடன் தாம் நேரில் பேச விரும்புகின்றார் என்று இந்தச் சந்திப்பின்போது நாமல் எம்.பி., சுமந்திரனிடம் தெரிவித்தார் என அறியவந்தது.

'நாளை ஞாயிற்றுக்கிழமை எங்கள் கட்சியின் மத்திய குழு வவுனியாவில் கூடவிருக்கின்றது. அதில் உங்களின் (நாமல் ராஜபக்ஷவின்) கோரிக்கையை தெரியப்படுத்துகின்றேன். கட்சித் தலைமையின் முடிவுக்கு அமைய யாழ்ப்பாணத்தில் கட்சிப் பிரதிநிதிகளை நீங்கள் சந்திப்பதற்கான ஏற்பாட்டையும் அனுமதியையும் அங்கு பெற்று உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்." - என்று சாரப்பட சுமந்திரன் பதிலளித்தார் எனத் தெரியவருகின்றது.

'13ஆம் திருத்தத்தின் நடைமுறையாக்கம் பற்றி நான் குறிப்பிட்டேன். நாமலின் தந்தையார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 'பதிமூன்று பிளஸ்' தருவார் என உறுதி அளித்திருந்தமையை நான் நினைவூட்டினேன். ஆயினும் 13 ஆம் திருத்தத்தின் முழு நடைமுறையாக்கும் குறித்து அவர் (நாமல்) இன்றைய சந்திப்பில் அதிக ஈடுபாடு காட்டவில்லை. காணி, பொலிஸ் அதிகாரப்பதிவு தொடர்பில் 13 இல் சில சிக்கல்கள் இருக்கின்றன என்ற சாரப்பட அவர் சுட்டிக்காட்டினார்.

எனினும் நல்லாட்சி அரசின் காலத்தில் முழு நாடாளுமன்றமுமே அரசமைப்புப் பேரவையாக மாறி புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் ஈடுபட்டமையை அவர் நினைவூட்டினார். அது கணிசமான அளவு இணக்கத்துடன் முன்னேற்றம் கண்டமையைச் சுட்டிக்காட்டி, அது விட்ட இடத்தில் இருந்து அந்த முயற்சியைத் தொடர்ந்து, இணக்கத் தீர்வு எட்ட எத்தனிக்க கூடாதா என்ற ஓர் ஆலோசனையை அவர் முன்வைத்தார். அதில், அதிகார பரவலாக்கள், ஆட்சி முறைமை பற்றிய விடயங்கள் எல்லாவற்றிலும் பெரும்பாலும் ஏகமனதான இணக்க நிலைமை காணப்பட்டமையையும், தேர்தல் சீர்திருத்தம் தொடர்பான அம்சத்திலேயே முரண்பாடும் இழுபறியும் நீடித்தமையையும் நாங்கள் இருவருமே இன்றைய பேச்சில் எங்களுக்குள் பரஸ்பரம் நினைவூட்டிக் கருத்தைப் பகிர்ந்து கொண்டோம்.

அந்த அரசமைப்பு உருவாக்க முயற்சியில் சட்டம் - ஒழுங்கு தொடர்பான விடயங்களைக் கையாளும் உபகுழுவில் தாமும் அங்கம் வகித்தமையைச் சுட்டிக் காட்டிய நாமல் ராஜபக்ஷ, அந்த முயற்சியைத் தொடர்ந்து முன்னெடுத்து, அதனை - புதிய அரசமைப்பு உருவாக்கத்தை - முறையாக மேற்கொண்டு ஏன் நிலையான இணக்கத் தீர்வுக்கு வர முயலக்கூடாது என்று கேள்வி எழுப்பினார்.

"இவை குறித்துத் தமது கட்சியின் தலைமைப் பீடத்துடனும் நிறைவேற்று குழுவுடனும் கலந்தாலோசனை செய்து ஒரு முடிவுக்கு வந்த பின்னர், அதன் அடிப்படையில் தமிழரசுடன் பேசி முடிவெடுக்கத் தான் விரும்புகின்றார் என்று கோடி காட்டிய நாமல், அதற்காகத் தான் யாழ்ப்பாணத்திற்கு நேரில் வருகின்றார் என்றும் குறிப்பிட்டார்"- என இன்றைய சந்திப்பு குறித்து சுமந்திரன் எம்.பி. கருத்து வெளியிட்டார்.

# சித்தானைக்குட்டி சுவாமியின் 73ஆவது குரு பூஜை நாளை





(வி.ரி.சகாதேவராஜா)

சித்தருள்சித்தர் ஸ்ரீ சித்தானைக் குட்டி சுவாமியின் 73 ஆவது குரு பூஜையும், அன்னதானமும் காரைதீவு ஸ்ரீ சித்தா னைக்குட்டி ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை (11) நடை பெறவுள்ளன.

ஆலய பரிபாலன சபை தலைவர் சி.நந்தேஸ்வரன் தலைமையில் நடை பெறவுள்ள நிகழ்வுக்கு முன்னோடி யாக கடந்த ஞாயிற்றுக்கிழமை (04) குரு பூஜை தொடர்பான சித்தர் பட்டய அறி விப்பு இடம்பெற்றது.

வெள்ளிக்கிழமை (09) சுவாமிகள் முத்து சப்புறத்தில் வீதி வலம் வந் தது.

இன்று சனிக்கிழமை (10) சித்தர் ஆலயத்தில் கோமாதா பூஜை, 210 சித்தர்களுக்கான வேள்வி, அன்ன தானம் மற்றும் திருவிளக்கு பூஜை என்பன நடைபெற்றன.

நாளை ஞாயிற்றுக்கிழமை (11) ஆயி ரக் கணக்கான அடியார்கள் மத்தியில் 73 ஆவது குரு பூஜையும் அன்ன தானமும் நடைபெறவுள்ளன. நாளை மறுதினம் 12 ஆம் திகதி இடும்பன் பூஜையுடன் குருபூஜை நிறை வடையும்.





நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# 13 ஐத் தவிர்க்கும் நாமல்

'எல்லோரும் ஏறி விழுந்த நொண்டிக் குதிரையில் சக்கடத்தார் தானும் ஏறி விழுந்தாராம்!' - என்ற பேச்சு மொழி நம் மத்தியில் உண்டு. அப்படி ஒரு நிலைமை தமக்கு வேண்டாம் என்று மொட்டுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ எண்ணி இருப்பார் போலும்.

ஜனாதிபதித் தேர்தலையொட்டி தமிழரசு கட்சியுடன் - தமிழர் தரப்புடன் - தாம் பேசப்போகும் விடயத்தில் 13ஆம் திருத்தத்தைப் பற்றி குறிப்பிடாமல் தவிர்க்கும் அவரது அணுகுமுறை, தாமும் அந்த நொண்டிக் குதிரையில் ஏறிச் சறுக்கி விழுவான் ஏன் என்ற எண்ணத்தில் அவருக்கு ஏற்பட்டதாக இருக்கலாம்.

இந்தத் தேர்தலில் போட்டியிடும் மற்றைய மூன்று பிரதான வேட்பாளர்களும் 13ஆம் திருத்தம் குறித்து பிரஸ்தாபிக்கையில் அதனை தவிர்க்க முயல்கின்றார் நாமல். அதற்கு உள் சுக்குமம் உண்டு.

அரசமைப்பின் 13 ஆம் திருத்தத்தில் உள்ளவற்றை முழுமையாக அப்படியே நடைமுறைப்படுத்துவேன் என்கிறார் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ.

13 இல் உள்ளவற்றில் பொலிஸ் அதிகாரப் பகிர்வு தவிர்ந்த ஏனையவை முழுமையாக வழங்கப்படும், பொலிஸ் அதிகாரத்தைப் பகிர்வது குறித்து ஏனைய எல்லாத் தரப்புகளோடும் பேசி முடிவெடுக்கலாம் என்கிறார் இம்முறை சுயேச்சையாக தேர்தலில் களமிறங்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

ஆனால் மூன்றாவது தரப்பான தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அநுர குமார திஸநாயக்க கொஞ்சம் வித்தியாசமாகக் கூறுகின்றார்.

தமிழர்களின் பிரச்சனைக்கு 13-ஆம் திருத்தம் இறுதித் தீர்வு அல்ல. புதிய அரசமைப்பு உருவாக்கத்தின் ஊடாகத்தான் இறுதியான - இணக்கமான - தீர்வை எட்ட வேண்டும், அதுதான் இலக்கு, எனினும் அதுவரையில் 13 ஆம் திருத்தத்தில் உள்ளவற்றை அப்படியே முழுமையாக நடைமுறைப்படுத்தலாம் என்பது அநுர குமார திஸநாயக்கவின் நிலைப்பாடு.

தமிழர்களின் பிரதான கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சி கட்சிக்கு இந்த மூன்று வேட்பாளர்களுமே தத்தமது இந்த நிலைப்பாடுகளை தெரிவித்து விட்டனர். தெளிவுபடுத்தி விட்டனர்.

அவற்றைத் தமது இப்போதைய ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனத்தில் அப்படியே அவர்கள் சேர்ப்பார்களா - உறுதிப்படுத்துவார்களா - என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

ஆனால் இந்த 13ஆம் திருத்தத்தின் அடிப்படையில் தமிழர் தரப்புடன் பேசுவதை - அதை ஒட்டி தமிழர்களுக்கு உறுதிமொழி வழங்குவதை - மொட்டுவின் வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ அடியோடு தவிர்க்கின்றார் என்பது தெளிவானது.

அதே நேரம் 13ஆம் திருத்தத்தின் முழு நடைமுறையாக்கத்தை மோசமாக விமர்சித்து, தமிழர்களின் எரிச்சலை வாங்கிக் கட்டிக் கொள்ளவும் அவர் விரும்பவில்லை என்பது கண்கூடு.

அதனால் தான் நல்லாட்சி அரசின் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட - முக்கால் கிணறு தாண்டிய நிலையில் உள்ள - இடையில் தடைப்பட்டு போயிருக்கின்ற - புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சியைத் தொடர்ந்து முன்னெடுப்பது பற்றிய புதிய திட்டத்தை அவர் அவிழ்த்து விடுகின்றார்.

உண்மையில் நல்லாட்சி அரசில் அந்தத் திட்டத்தை முன்னெடுத்த ரணில் விக்கிரமசிங்கதான் அதனை இப்போது தொடர்வோம் என்று யோசனையாக கூற வேண்டியவர் ஆனால் அவர் அந்தத் திட்டத்தை - தமது அரசமைப்பு உருவாக்க முயற்சியை - மறந்து ஆண்டுகள் பலவாகிவிட்டன.

முன்னைய ஜனாதிபதித் தேர்தல்களில் பேரினவாத வெறித்தனம் பிரவகித்து ஓடியது. இப்போது இதுவரை மூன்று பிரதான வேட்பாளர்களும் - ரணில், சஜித், அனுவகுமார மூவருமே - இனவாதத்தைக் கையில் எடுக்கவில்லை. அத்தகைய புறச் சூழலில் உள்ளூறக் கன்று குமுறியபடி இருக்கும் அந்தப் பேரினவாத வெறிப்போக்குத் தனத்தின், அவர்களின் வாக்குகளைத் தம்பக்கம் திருப்பிக் கொள்ள நாமல் விரும்புகின்றார் போலும்.

அதனால் தான் 13 ஐ ஒட்டிய விடயங்களை ஒட்டித் தள்ளி நிற்க முயல்கின்றார் அவர்.




# விருது வழங்கல்!

(எஸ்.எம்.எம்.றம்ஸான்)

எக்ஸத் ஊடக வலையமைப்பின் ஏற்பாட்டில் "தேசத்திற்காய் நாம் பிரஜை விருது" வழங்கும் நிகழ்வு புதிய காத்தான்குடி அல்-மனர் அறிவியல் கல்லூயின் அப்துல் ஜவாத் மண்டபத்தில் எக்ஸத் ஊடக வலையமைப்பின் பணிப்பாளர் ஜே.எல். எம்.ஷாஜஹான் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில், அதிதிகளாகத் தென்கிழக்கு பல்கலைக் கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியர் கலாநிதி றமீஸ் அப்துல்லாஹ், கலை, கலாசாரபீட பீடாதிபதி பேராசிரியர் எம்.எம்.பாஸில், பேராசிரியர் கலாநிதி இஸ்மாயில், கலாநிதி எ.எ.எம்.நுபைல், சிரேஷ்ட விரிவுரையாளர் எ.எம்.றியாஸ் அகமட், ஸ்ரீ லங்கா மீடியா போரத்தின் பணிப்பாளரும் ஊடகவியலாளருமான எம்.ரீ.எம்.பாரிஸ், மட்டக்களப்பு வர்த்தக சங்கத் தலைவர் கே.எம்.கலீல், காத்தான்குடி நகர சபையின் முன்னாள் தவிசாளர் மர்சூக் அகமட் லெவ்வை உட்பட பலரும் கலந்து



கொண்டனர்.

இதன் போது பாதுகாப்புத் தரப்பு அதிகாரிகள், தேசத்துக்குப் பங்காற்றியவர்கள் உள்ளடங்களாக 50 பேருக்கு "தேசத் திற்காய் நாம் எனும் பிரஜை விருது" வழங்கி பொன்னாடை போர்த்திக் கௌரவித்தனர்.

# வீட்டுக்கு அடிக்கல்!

(எம் எப். நவாஸ் )

சமூக வலுவூட்டல் அமைச்சின் கீழ் அங்கவீன முற்றோருக்கான தேசிய செயலகத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் அட்டாளைச்சேனை பிரதேச செயலக பிரிவிலுள்ள வலுவிழந்த , வீடு இல்லாத பயனாளிகளின் குடும்பங்களுக்கு வீடு வழங்க அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம் பெற்றது.

மேலும் சமூக சேவை திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் கே எம்.மொஹிடீனின் ஏற்பாட்டின் கீழ் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக பிரதேச செயலாளர் பி. ரீ. எம். இர்பான்



கலந்து கொண்டு அடிக்கல்லை நட்டு வைத்தார்.

இதன் போது சமூக சேவைகள் உத்தியோகத்தர் ஏ. ஜீ .அர்ஸாத் முதியோர் மேம்பாட்டு உத்தியோகத்தர் எம்.ஏ.எம்.கைஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# நிந்தவூர் ஆஸ்பத்திரிக்கு ஈ.சீ.ஜீ.இயந்திரம்!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

நிந்தவூர் ஆதார வைத்தியசாலைக்கு அண்மையில் விஜயம் மேற்கொண்ட கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் திருமதி சகீலா இஸ்ஸடீன் அந்த வைத்தியசாலையின் மகப்பேற்று விடுதிக்கு ஈ.சீ. ஜீ.இயந்திரம் ஒன்றை வழங்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து அவ்வைத்தியசாலையின் அபி விருத்தி தொடர்பாகவும் கலந்துரையாடிய பணிப்பாளர் வைத்தியசாலையின் தேவைகள் மற்றும் குறைபாடுகளையும் கேட்டறிந்து கொண்டார். அதில் அத்தியாவசிய தேவையாகவுள்ள சில விடயங்களை உடன் நிவர்த்தி செய்து தருவதாகவும் உறுதியளித்தார்.

இந்த நிகழ்வில் பதில் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் எம்.ஐ.எம். பௌஸ், பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம்.மாஹிர், உயிரியல் மருத்துவப் பொறியியலாளர் என்.எம்.இப்ஹாம், கணக்காளர் திருமதி உசைனா பாரிஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.




# நண்டுகள் இறந்து ஒதுங்கின!

திருகோணமலை நகரில் உள்ள கடற்கரையில் இன்று (10) அதிகாலை முதல் லட்சக் கணக்கான சிறு சிகப்பு நிறத்திலான நண்டுகள் இறந்த நிலையில் கரை ஒதுங்கி வருகின்றன.

சனி, ஞாயிறு நாள்களில் இப்பிரதேசத்துக்கு கூடுதலான சுற்றுலா பயணிகள் வருகின்ற நிலையில் இவ்வாறு நண்டுகள் இறந்து ஒதுங்கி வருகின்றன.

மக்கள் இதனைப் பார்வையிட்டு வரகின்றனர்.

இதறாகான காரணம் தெரியாத நிலையில் கடற்றொழிலாளர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

சுமார் ஐந்து தொடக்கம் ஆறு கிலோ மீற்றர் நீளமுள்ள இந்தக் கடற்கரையில் மூன்று தொடக்கம் 4 கிலோ மீற்றர் தூரம்வரை இவ்வாறான சிகப்பு நிற நண்டுகள் இறந்த நிலையில் கரை ஒதுங்கி உள்ளன என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.





# பாண்ட் வாத்திய கருவிகள் வந்தன

(அஸ்ஹர் இப்றாஹிம்)

பெரிய கல்லாறு விநாயகர் வித்தியாலய மாணவர்களின் நீண்ட கால தேவையாக காணப்பட்ட பாண்ட் வாத்திய இசைக்கருவிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு அண்மையில்இடம் பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக் கியன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு வாத்திய கருவிகளைப் பாட சாலை நிர்வாகத்திடம் கையளித்தார்.

இதற்கான நிதியானது நாடாளு மன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனின் 2024 ஆம் ஆண்டுக்கான பன்முகப் படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் பகிர்ந் தளிக்கப்பட்டது.



# பட்டதாரி ஆசிரியர் சேவைகளுக்கு பிரதேச அடிப்படையில் ஆள்சேர்ப்பு

## உரிமை மீறல்

தெற்கு மாகாணத்தில் உள்ள தமிழ் மொழி மூல பாடசாலைகளுக்கு பட்டதாரி ஆசிரியர் சேவைக்கு ஆள்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பம் பிரதேச செயலக அடிப்படையில் கோரப்படுவதால் தமது அடிப்படை உரிமை மீறப்படுவதாக தோட்டப்புற பகுதிகளில் வசிக்கும் மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இது தொடர்பாக தெரியவருவதாவது,

இலங்கை ஆசிரியர் சேவைக்குப் பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கான முயற்சிகள் பல கட்டங்களாக மேற்கொள்ளப்பட்டன. அண்மையில் கூட ஆங்கில பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமாதாரிகளை ஆள்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பங்கள் தெற்கு மாகாண பொது சேவை ஆணைக்குழுவால் கோரப்பட்டிருந்தன.

குறித்த விண்ணப்பங்களும் ஏற்கனவே கோரப்பட்ட விண்ணப்பங்களும் பிரதேச செயலக அடிப்படையிலேயே கோரப்படுகின்றன. இதனால் பட்டதாரிகளுக்கு பற்றாக்குறையாக இருக்கும் பெருந்தோட்ட பகுதிகளுக்கு ஆசிரியர் பற்றாக்குறை இருந்த போதும் நியமனங்கள் வழங்கப்படவில்லை. இதனால் குறித்த பகுதிகளில் பாடசாலைகளை நடத்தி செல்வதில் பாரிய நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன.

குறிப்பாக கடந்த காலங்களில் கூட ஆள்சேர்ப்பு செய்யப்பட்ட பட்டதாரிகள் எவரும் பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கு நியமிக்கப்படவில்லை. இது தொடர்பில் அதிபர்களால் ஆசிரியர்களால் கேள்வி எழுப்பப்பட்ட போது பெருந்தோட்ட பகுதிகளில் பட்டதாரிகளால் இல்லாமையால் அங்கு பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்க முடியாது என தெரிவிக்கப்பட்டது. இதனால் தமது பகுதி மோசமாக பாதிக்கப்படுவதாக மக்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

பல்கலைக்கழக அனுமதி உட்பட்ட கோட்டா முறைகள் பிரதேச செயலக முறைமையில் கோரப்படுவதில்லை. அது மாகாணத்தின் ஆளணி தேவைக்கு ஏற்பவே கோரப்படுகின்றது. ஆனால் ஆட்சேர்ப்பு மட்டும் பிரதேச செயலக அடிப்படையில்கோரப்படும்போது குறித்த பிரதேசத்தில் பொருத்தமான ஆளணி இல்லாத பட்சத்தில் அப்பிரதேசம் அரச சேவையை பெற தகுதியற்றதா என்ற கேள்வியே எமக்கு எழுகின்றது என மக்கள் தெரிவிக்கின்றனர்.

நாம் பல்வேறு நெருக்கடிகளின் மத்தியில் கல்வியை பெறும் ஒரு சமூகம் என்பதால் தொடர்ந்தும் இவ்வாறான பாகுபாடுக்கு உட்படுதல் விரக்தியையே அளிக்கின்றதாக மக்கள் கவலை வெளியிடுகின்றனர்.

தாம் தமது பிள்ளைகளை வெளியில் அனுப்பி படிப்பிக்க வசதியற்ற சமூகமாக இருப்பதால் ஆசிரியர் பற்றாக்குறையால் தமது பிள்ளைகள் மோசமாக பாதிக்கப்படுவதாக குற்றம் சாட்டுகின்றனர்

அத்துடன் தொடர்ந்து பிரதேச செயலக அடிப்படையில் விண்ணப்பங்களை கோரி பட்டதாரி ஆசிரியர்களை ஆள்சேர்ப்பு செய்தல் எமது அடிப்படை உரிமையை அப்பட்டமாக மீறுவதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

இது இலங்கை ஜன நாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பு சட்டத்தின் உறுப்புரை 12 ஆம் உறுப்புரையின் 2 ஆம் சரத்தின் கீழ் இனம், மதம், மொழி, சாதி, பால், வர்க்கம், அரசியல், கொள்கை, பிறப்பிடம் காரணமாக அல்லது அத்தகைய காரணங்களில் ஏதோ ஒன்று காரணமாகவோ பிரஜைகள் எவரும் பாகுபாடு காட்டப்படுதலோ ஓரங்கட்டப்படுதலோ ஆகாது என்ற ஏற்பாட்டை அப்பட்டமாக மீறுவதாக கருதுகின்றனர் .

எனவே இவ்விடயத்தில் மனித உரிமைகள் ஆணைக்குழு, அரசியல்வாதிகள் ஆசிரியர் சங்கள் தலையிட்டு எமக்கான நியாயத்தை பெற்று வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.



# சைவப்புலவர் குமரன் கௌரவிப்பு

சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய ஆடிப்பூர இலட்சார்ச்சனைப் பெருவிழாவில் 10 நாள்கள் சைவமும் வாழ்வும் என்னும் விடயப் பொருளில் தொடர் சொற் பொழிவாற்றிய பண்டிதர் செஞ்சொல்வேந்தர் சைவப்புலவர் செ.த.குமரன் ஆலய தர்மகாத்தா சபையால் கௌரவிக்கப்பட்டார்.





# போசாக்குக் கண்காட்சி

சங்கானை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் போசாக்குக் கண்காட்சி வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.

சங்கானை பிரதேச சுகாதார வைத்திய பணிமனை மற்றும் வேள்ட் விசன் நிறுவனம் இணைந்து கண்காட்சியின் ஏற்பாடு செய்த நிலையில் தாய்மார் கழகங்களால் போசாக்கு உணவுகள் விழிப்புணர்வுக்காகக் காட்சிப்படுத்தப்பட்டன. இதேவேளை விற்பனையும் இடம்பெற்றது.

கண்காட்சி நிகழ்வின் பகுதியாக போசாக்கு உணவு அறிவைச் சிறுவர்கள் மத்தியில் மேம்படுத்தும் முகமாக வேள்ட் விஷன் நிறுவனத்தால் பாடசாலை மாணவர்களுகிடையே நடத்தப்பட்ட ஓவிய போட்டிகளுக்கான பரிசில்கள் சங்கானை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் யதுநந்தனால் வழங்கி வைக்கப்பட்டன.

இதனபோது சங்கானை சுகாதார வைத்திய பணிமனையினர் , பொது சுகாதார பரிசோதகர்கள், குடும்பநல உத்தியோகத்தர்கள், வேள்ட் விஷன் நிறுவனத்தினர் உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.







# மட்டு.கரவெட்டியில் யானைகள் அட்டகாசம்!

(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் பின்தங்கிய பிரதேசங்களில் ஒன்றான கரவெட்டிக் கிராமத்தில் இரவு வேளையில் உள் நுழைந்த யானைகள் பாரிய தென்னை மரங்களை வீழ்த்தியுள்ளன.

இரவு வேளைகளில் ஊர்மனைகளுக்குள் உள்நுழையும் யானைகள் விவசாய நிலங்களைச் சேதப்படுத்துகின்றன.

இதன் காரணமாக தாம் பயத்தின் மத்தியிலேயே வாழ்வை நடத்த வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் உள்ளோம் என்று மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதுவிடயத்தில் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.



# வவுனியா வடக்கு வலயத்திலுள்ள சாரண ஆசிரியர்களுக்குப் பயிற்சி

(கே.வசந்தன்)

வவுனியா வடக்கு வலய சாரண ஆசிரியர்களுக்கு கலைக்கூறு -1 பயிற்சியானது இரு தினங்களாக இடம் பெற்றது.

வவுனியா மாவட்ட சாரண சங்கத்தின் ஏற்பாட்டில் ஓமந்தை மத்திய கல்லூரியில் இந்தப் பயிற்சியானது நடைபெற்றது.

வவுனியா மாவட்ட சாரண ஆணையாளர் யோ.கஜேந்திரன் தலைமையில் இடம் பெற்ற இந்தப் பயிற்சியில் பயிற்சித் தலைவராக ப.அஜித்குமாரும், உதவி பயிற்சி தலைவர்களாக ரா.வரதராஜா, யோ.கேதீசன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில், வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் உதவிக் கல்விப் பணிப்பாளர், உதவி மாவட்ட ஆணையாளர் ஆகியோரும் அதிதிகளாக கலந்து கொண்டிருந்தனர்.





# மன்னார் மடு திருத்தலத் திருவிழா தொடர்பில் விசேட கலந்துரையாடல்

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மடு திருத்தலத்தின் ஆவணி மாத திருவிழா திருப்பலியில் இம்முறை நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பல லட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர் பார்க்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் முன் ஆயத்த நடவடிக்கைகள் குறித்த விசேட கலந்துரையாடல் நேற்று வெள்ளிக்கிழமை (09) மடு திருத்தலத்தில் இடம்பெற்றது.

மன்னார் மருதமடு அன்னையின் ஆவணி மாத திருவிழா கடந்த 6 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. 15 ஆம் திகதி விசேட திருவிழாவாக இடம்பெறவுள்ளது.

இந்த நிலையில் மடு திருத்தலத்தின் ஆவணி மாத திருவிழாவுக்கான ஆயத்த கலந்துரையாடல் மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையின் பங்குபற்றுதலுடன் நேற்று மடு திருத்தல மண்டபத்தில் இடம் பெற்றுள்ளது. வருடா வருடம் மடு அன்னையின் ஆவணித் திருவிழாவில் கலந்து கொள்ள நாட்டின் பல பாகங்களில் இருந்தும் புலம்பெயர் நாடுகளில் இருந்தும் லட்சக்கணக்கான பக்தர்கள் வந்து செல்வது வழமை.

இந்த நிலையில் வருகை தரும் பக்தர்களின் நலனைக் கருத்தில் கொண்டு முன்னெடுக்கப்பட வேண்டிய சகல விதமான ஏற்பாடுகள் குறித்து அழைக்கப்பட்ட திணைக்களங்களுடன் கலந்துரையாடப்பட்டது.

வருகை தரும் பக்தர்களின் நலனைக் கருத்தில் கொண்டு சுகாதாரம், போக்குவரத்து, மருத்துவ வசதிகள், நீர் விநியோகம், உணவு விநியோகம் தொடர்பில் ஆராயப்பட்டது.

சட்டம் ஒழுங்கைப் பின்பற்றும் வகையில் முப்படையினரின் பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட அரச அதிபர் தலைமையில் இடம்பெற்ற குறித்த முன்னாயத்தக் கலந்துரையாடலில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, குரு முதல்வர் அருட்தந்தை கிறிஸ்து நாயகம் அடிகளார், மடு திருத்தல பரிபாலகர் அருட்தந்தை ஞானப்பிரகாசம் அடிகளார், ராணுவம், பொலிஸ், கடற்படை அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், வைத்தியர்கள் மற்றும் அழைக்கப்பட்ட திணைக்கள தலைவர்கள் கலந்து கொண்டனர்.







# பங்களாதேஷ் சிறைகளில் இருந்து தப்பிச் சென்ற 1,200 கைதிகள் இந்தியாவில் நுழைவதற்கு வாய்ப்பு

பங்களாதேஷ் சிறைகளில் இருந்து தப்பிய 1,200 கைதிகள் இந்தியாவில் நுழைய வாய்ப்புள்ளது என இந்திய எல்லை பாதுகாப்பு படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பங்களாதேஷில் சுதந்திர போராட்ட தியாகிகளின் வாரிசுகளுக்கு மீண்டும் இடஒதுக்கீடு வழங்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்து மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இது வன்முறையாக மாறிய தால் அந்நாட்டு பிரதமர் ஷேக் ஹசீனா தனது பதவியை இராஜினாமா செய்து விட்டு இந்தியாவில் தஞ்சம் அடைந்தார்.

இந்த வன்முறையின்போது, பங்க ளாதேஷில் உள்ள 5 சிறைகளில் இருந்த கைதிகளை போராட்டக்காரர்கள் வெளியேற்றினர். நர்சிங்கி சிறையில் இருந்து தப்பியவர்களில் 400 கைதிகள் மட்டும் சரணடைந்துள்ளனர். ஜமாத்–இ–இஸ்லாமி, ஹெபாசத்–இ–இஸ்லாம் அமைப்புகளைச் சேர்ந்ததீவிரவாதிகள் சரணைடையவில்லை. இவர்களில் பலர் தாங்கள் பதுக்கிவைத்துள்ள ஆயுதங்களை விற்க இந்தியாவுக்குள் நுழையலாம் என எல்லை பாதுகாப்பு படை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷில் போராட்டத்தின் போது பொலிஸார் பலரும் பணிக்கு திரும்பவில்லை. அவர்கள் இந்தியாவுக் குள் நுழையலாம் என கூறப்படுகிறது.

ஷேக் ஹசீனாவின் அவாமி லீக் கட்சியை சேர்ந்த அரசியல்வாதிகள் இருவர் போலி ஆவணங்கள் மூலம் இந்தியாவுக்குள் நுழைய முயன்றனர். அவர்களை சோதனைசாவடியில் பங்க ளாதேஷ் எல்லை பாதுகாப்பு வீரர்கள் கைது செய்தனர். அவாமி லீக் கட்சியைச் சேர்ந்தவர்கள் பாதுகாப்புக்காக இந்தி யாவுக்குள் நுழைய முயற்சிக்கலாம் என கூறப்படுகிறது. கடந்த சில நாள்களாக பங்களாதேஷ் மக்கள் எல்லை வழியாக ஊடுருவ முயன்ற 4 சம்பவங்கள் நடைபெற்றன.

மாணவர்கள் போராட்டம் காரணமாக பங்களாதேஷ் எல்லைப் பாதுகாப்பு படை வீரர்கள் சட்டம் ஒழுங்கை கண் காணிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால், 4096 கிலோ மீற்றர் நீள இந்திய – பங்களாதேஷ் எல்லையில் உள்ள சோதனைச் சாவடிகளில் வீரர்கள் போதிய அளவில் இல்லை. எல்லைப் பகுதிகளில் அமைக்கப்பட்ட முள்வேலிக ளில் பல இடங்கள் ஓட்டையாகவும், சில பகுதிகளில் நீர்நிலைகள் இருப்ப தாலும், பங்களாதேஷில் இருந்து ஊடுருவும் நபர்களின் எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புள்ளது. இதன் வழியாக ஏற்கனவே கால்நடைகள், தங்கம், போதைப் பொருள்கள் மற்றும் உணவுப் பொருள்கள் கடத்தல்கள் நடைபெறுகின்றன.

இதனால், இந்திய எல்லை பாது காப்புபடை வீரர்கள் தீவிர கண்காணிப் பில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் பங்க ளாதேஷ் எல்லை பாதுகாப்பு அதிகாரி களுடன் தகவல் தொடர்பை ஏற்படுத்தி ஊடுருவல் தொடர்பான தகவல்களை பகிர்ந்து வருகின்றனர் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# ரஷ்ய இராணுவத்தில் இருந்து இந்தியர்கள் விடுவிக்கப்படுவார்கள்

## பிரதமர் மோடியிடம் புடின் உறுதி

ரஷ்ய இராணுவத்தில் இணைக்கப் பட்டுள்ள இந்தியர்கள் விடுவிக்கப்படு வார்கள் என இந்திய பிரதமர் மோடியிடம் புடின் உறுதி வழங்கியுள்ளார்.

இதுதொடர்பில் மக்களவையில் மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் உரையாற்றுகையில்,

“ரஷ்ய இராணுவத்தில் இந்தியர் களை சேர்ப்பது மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் சைபர் குற்ற பணிகளில் இந்தியர்கள் கட்டாயமாக ஈடுபடுத்துவது ஆகியபிரச்சினைகளை மத்திய அரசுதீவிரமாக கவனத்தில் எடுத்துக்கொண்டுள்ளது. இந்தியர்களை மீட்டுக் கொண்டு வருவதற்கு மத்திய அரசு முன்னுரிமை தந்து செயல்பட்டு



வருகிறது.

ரஷ்ய ராணுவத்தில் 91 இந்தியர்கள் சேர்க்கப்பட்டிருப்பது இதுவரை உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. அதில், 8 பேர் உயிரிழந்துவிட்டனர். 14 பேர் ஏற்கனவே விடுவிக்கப்பட்டு விட்டனர். இந்த நிலை யில், 69 பேர்ரஷ்ய இராணுவத்திலிருந்து விடுவிக்கப்படுவதற்காக காத்திருக்கிறோம். கடந்த மாதம் ரஷ்ய ஜனாதிபதி புடினுடனான சந்திப்பின் போதும் பிரதமர் நரேந்திர மோடி இந்த பிரச்சினை குறித்து பேசியுள்ளார்.

ரஷ்ய இராணுவத்துக்கு சேவைசெய் வதற்காக இந்தியர்கள் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளனர் என்று கூறப்படுவது தவறு. இந்தியர்கள் தவறாக வழிநடத்தப் பட்டதே இந்த குழப்பத்துக்கு காரணம். வேறுவேலைக்கு அழைத்து செல்லப் பட்டு பின்னர் அவர்கள் ரஷ்ய இராணு வத்தில் சேர கட்டாயப்படுத்தப்பட்டுள் ளனர். ரஷ்ய இராணுவத்தில் பணி புரி யும் கடைசி இந்தியர் வெளியேறி தாய் நாடு திரும்பும் வரை மத்திய அரசு அதற் கான நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்ளும்.”– என்றார்.



# பிரேசில் விமான விபத்து; பயணித்த 62 பேரும் பலி

பிரேசிலின் சாவ் பாலோவில் பயணிகள் விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

விபத்தின் போது, விமானத்தில் 58 பயணிகள் மற்றும் 4 விமான நிறுவன ஊழியர்கள் இருந்தனர் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், விமானம் Vinhedo நகரத்தில் விழுந்து நொறுங்கி விபத்துக்குள்ளாகி இருப்பதை அந்நாட்டு தீயணைப்பு படையினர் உறுதிபடுத்தியுள்ளனர்.

இதேவேளை, இந்த ATR-72 விமானமானது பரானா மாகாணத்தில் உள்ள கேஸ்கேவலிருந்து சாவ் பாலோவின் சர்வதேச விமான நிலையமான கேரோலியோஸ் நோக்கி சென்று கொண்டிருந்த போது விபத்துக்குள்ளாகியுள்ளதாக கூறப்படுகிறது.



இதன் படி, விபத்துக்குள்ளான விமானத்தில் இருந்த 62 பேரும் உயிரிழந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.





# வயநாட்டில் நேற்றும் நில அதிர்வு; மக்கள் மத்தியில் மீண்டும் பதற்றம்

வயநாட்டில் நேற்று காலை திடீரென நில அதிர்வு ஏற்பட்டதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. இதையடுத்து அப்பகுதியிலிருந்த மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டனர்.

கடந்த மாதம் 30 ஆம் திகதி கேரள மாநிலம் வயநாட்டில் ஏற்பட்ட நிலச்சரிவால் 3 கிராமங்கள் மண்ணில் புதைந்தன. இந்த பேரழிவில் 400 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த அதிர்ச்சியிலிருந்து அப்பகுதி மக்கள் மீள்வதற்குள் நேற்று வயநாடு பகுதியில் மீண்டும் நில அதிர்வு ஏற்பட்டது. இந்த நில அதிர்வானது வயநாட்டின் அம்பலவாயல், மானகொம்பு, அம்புகுத்தி மாளிகா, நென்மேனி, பதிபரம்பா, சுதனகிகிரி, சேத்துக்குன், கரட்டப்பிடி, மயிலாடிபாடி, சோழபுரம், தைகும்தரா ஆகிய கிராமங்களில் உணரப்பட்டதாக வயநாடு மாவட்ட ஆட்சியர் மேகஸ்ரீ தெரிவித்தார்.

இதனால் அப்பகுதியில் உள்ள மக்கள் மீண்டும் நிலச்சரிவு ஏற்பட்டதோ என்று பயந்துவிட்டனர். பின்னர் அது வெறும் நிலஅதிர்வுதான் என்பது தெரிந்தது.

இதையடுத்து அப்பகுதியில் வசித்த மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு மாவட்ட நிர்வாக அதிகாரிகள்





# இந்திய பிரதமர் நரேந்திர மோடி ஹெலிக்கொப்டரில் சென்று ஆய்வு

கேரள மாநிலம் வயநாட்டில் ஏற்பட்ட நிலச்சரிவு பாதிப்புகளை பிரதமர் நரேந்திர மோடி ஹெலிக்கொப்டரில் சென்று உண்று ஆய்வு செய்தார். அவருடன் கேரள ஆளுநர் முகமது ஆரிஃப் கான், முதல்வர் பினராயி விஜயன் ஆகியோரும் இணைந்திருந்தனர்.

முன்னதாக, பிரதமர் மோடி சிறப்பு விமானம் மூலம் கண்ணூர் விமான நிலையத்துக்கு இன்று காலை 11 மணிக்கு வந்தடைந்தார். அவரை கேரள ஆளுநரும், முதல்வரும் வரவேற்றனர். பின்னர் அங்கிருந்து ஹெலிக்கொப்டர் மூலம் புறப்பட்ட அவர்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளை ஆய்வு செய்தார். சூரல்மலா பகுதியில் மேல் ஆய்வு நடந்தினார். மத்திய இணை அமைச்சர் சுரேஷ் கோபியும் அவர்களுடன் ஆய்வில் ஈடுபட்டார்.

தொடர்ந்து, மதியம் 12.15 மணி அளவில் நிவாரண முகாம்களில் தங்கியுள்ள மக்களை சந்தித்து பேசினார். நிலச்சரிவில் படுகாயமடைந்து மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுவோரையும் சந்தித்து ஆறுதல் கூறினார். தற்போதைய மீட்புப் பணி நிலவரம் குறித்தும் இராணுவம் மற்றும் மீட்புப் படை அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

பின்னர் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் உயர்நிலைக் கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் வயநாடு பகுதிகளில் மேற்கொள்ளப்பட உள்ள புனரமைப்பு பணிகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

பிரதமர் நரேந்திர மோடியின் வருகையை ஒட்டி வயநாடு மாவட்டம் முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன. ரயில் நிலையம், பஸ் நிலையங்களில் தீவிர கண்காணிப்பு மேற்கொள்ளப்படுகிறது. கல்பேட்டை உள்ளிட்ட முக்கிய நகரங்களின் போக்குவரத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டு உள்ளன என இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கனடா முரசு

பக்கங்கள் - 6

சனிக்கிழமை 10/08/2024

## வேலையற்றோர் எண்ணிக்கையில் மாற்றம் இல்லை!

ஒன்ராரியோ, ஓகஸ்ட் 10

கனடாவின் வேலையற்றோர் எண்ணிக்கை தொடர்ந்தும் 6.4 சதவீதமாக உள்ளது.

C2

# கிழக்குக் கனடாவில் தொடர்ந்து கனமழை



ஒன்ராரியோ, ஓகஸ்ட் 10

வெப்பமண்டல புயல் காரணமாக கிழக்குக் கனடாவில் தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது.

நேற்று வெள்ளிக்கிழமை கிழக்குக் கனடாவின் சில பகுதிகளில் 100 மில்லி மீட்டர் மழை பெய்யக் கூடும் என எதிர்வு கூறப்பட்டிருந்தது.

இதனால் தெற்கு ஒன்ராரியோ, கியூபெக் மாகாணத்தின் சில பகுதிகளுக்கு சுற்றுச்சூழல் கனடா எச்சரிக்கைகளை விடுத்துள்ளது.

ஒன்ராரியோ, கோர்ன்வோல் முதல் கியூபெக்கில் கியூபெக் சிட்டி வரை திடீர் வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதிகளில் சிறிய நிலச்சரிவுகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன எனவும் எச்சரிக்கப்படுகிறது.

ஒட்டாவா கடுமையாக பாதிக்கப்படும் எனவும் கணிக்கப்பட்டுள்ளது.

நேற்று முழுவதும் 50 முதல் 75 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியிருந்தது.

நியூ பிரன்ஸ்விக் மாகாணத்தில் நேற்றிரவு முதல் இன்று காலை வரை 40 மில்லி மீற்றர் மழை பெய்யும் என எச்சரிக்கப்பட்டது.

# ரொறன்ரோ நகரப் பகுதிகளில் இன்றைய தினம் திடீர் வெள்ளம்?

ஒன்ராரியோ, ஓகஸ்ட் 10

கனடாவின் ரொறன்ரோ பகுதியில் இன்றைய தினம் திடீர் வெள்ளம் ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கனடிய சுற்றாடல் திணைக்களம் இது தொடர்பிலான எச்சரிக்கையை விடுத்துள்ளது.

இன்று ரொறன்ரோ பகுதிக்கு அதிக அளவு மழை பெய்யும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

டெபி புயல் காற்று காரணமாக இவ்வாறு கூடுதல் மழை வீழ்ச்சியை பதிவாகலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நூறு மில்லி மீட்டருக்கு மேற்பட்ட மழை பெய்யும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

C2



# கனடிய மகளிர் உதைபந்தாட்ட அணியினரின் சர்ச்சை குறித்து விசாரணைக்குக் கோரிக்கை




**ஒன்ராரியோ, ஓகஸ்ட் 10**

கனடிய மகளிர் உதைபந்தாட்ட அணி ஒலிம்பிக் போட்டிகளில் எதிர் நோக்கிய சர்ச்சை தொடர்பில் விசாரணை நடத்துமாறு புதிய ஜனநாயகக் கட்சி கோரியுள்ளது.

பிரான்ஸின் பரிஸ் நகரில் நடைபெற்று வரும் ஒலிம்பிக் போட்டி தொடரின் மகளிர் உதைபந்தாட்ட போட்டிகளின் போது ஏனைய அணிகள் கனடாத் தரப்பால் உளவு பார்க்கப்பட்டன எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக நியூசிலாந்து அணி வீராங்கனைகள் பயிற்சியில் ஈடுபட்டதனை உளவு பார்த்ததாக குற்றம் சுமத்தப்பட்டது.

ட்ரோன் கமராக்களை கொண்டு இவ்வாறு உளவு பார்த்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தச் சர்ச்சை காரணமாக மகளிர் தேசிய அணியின் தலைமை பயிற்றுவிப்பாளர் பணி நீக்கப்பட்டுள்ளார்.

அணியின் பயிற்றுப்பாளர் பெவ் பிரிட்ஸ்மான் மற்றும் ஏனைய பயிற்றுவிப்பு குழாம் உறுப்பினர்கள் நாடாளுமன்றில் முன்னிலையாகி விளக்கம் அளிக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பக்க சார்பற்ற விதத்தில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என புதிய ஜனநாயகக் கட்சி கோரி உள்ளது.

---

**வேலையற்றோர்...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஜுலை மாத வேலையற்றோர் விவ்ரங்களை கனடிய புள்ளி விவரத் திணைக்களம் நேற்று அறிவித்தது.

இதில் ஜுலை மாத வேலையற்றோர் விகிதத்தில் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை என குறிப்பிடப்படுகிறது.

ஜுலை மாதத்தில் 2,800 வேலையிழப்புகள் பதிவாகியுள்ளன.

**ரொறன்ரோ...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நகரப் பகுதிகளில் அதிக மழை வீழ்ச்சி காரணமாக வெள்ளம் ஏற்படலாம் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக முறையான வடிகாலமைப்பு வசதிகள் இல்லாத நகரப் பகுதிகளில் திடீர் வெள்ள நிலைமையை எதிர் நோக்க நேரிடலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே ரொறன்ரோவில் கடுமையான மழை வெள்ளம் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




# ஏழாவது தங்கத்தை சுவீகரித்தது கனடா

**ஒன்ராரியோ, ஓகஸ்ட் 10**

2024 பரிஸ் ஒலிம்பிக் போட்டியில் கனடா எழாவது தங்கப் பதக்கத்தை வெற்றி பெற்றது .

நேற்று நடைபெற்ற ஆண்களுக்கான 4 ஓ100 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியில் கனடா தங்கம் வென்றது.

ஓன்ரே டி கிராஸ், ஆரோன் பிறவுன், ஜெரோம் பிளேக், பிறன்டன் றொட்னி ஆகியோர் கனடாவுக்கான எழாவது தங்கப் பதக்கத்தை வெற்றி பெற்றனர்.

நேற்று நடந்த இறுதிப் போட்டியில் கனடிய அணி 37.5 வினாடிகளில் தூரத்தை முடித்து வெற்றி பெற்றது.

# கனடாவுக்கு இதுவரையில் 24 பதக்கங்கள்

**ஒன்ராரியோ, ஓகஸ்ட் 10**

2024 பரிஸ் ஒலிம்பிக் போட்டி முடிவடைவதற்கு இன்னும் இரண்டு நாள்களே இருக்கையில் இருபத்தி நான்கு பதக்கங்களை கனடா சுவீகரித்துள்ளது.

கடற்கரை கரப்பந்தாட்டத்தில் கனடா நேற்று வெள்ளிப் பதக்கத்தை வென்றது.

மெலிஸா ஹ்மானா பரடீஸ் மற்றும் பிரண்டி வில்கேர்ஸன் ஆகியோர் இணைந்து இந்த வெள்ளிப் பதக்கத்தை வெற்றனர்.

2024 பரிஸ் ஒலிம்பிக் போட்டியில் கனடா இதுவரை ஏழு தங்கம், ஆறு வெள்ளி, பதினொரு வெண்கலம் என மொத்தம் இருபத்தி நான்கு பதக்கங்களை வென்றுள்ளது.

# வூட்பைன் கடற்கரைப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் சாவு

ஒன்ராரியோ, ஓகஸ்ட் 10

டொரன்டோ வூட்பைன் கடற்கரைப் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஆண் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் படுகாயம் அடைந்த நபர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்தார்.

எனினும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

லேக் ஸோர் பகுதியில் இந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவரின் ஆள் அடையாள விவரங்கள் இதுவும் வெளியிடப்படவில்லை.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.



# ரொறன்ரோவில் காரைத் திருடியவர் காணொளிப் படங்களில் சிக்கினார்

கனடாவின் யோர்க் பிராந்தியத்தில் கார் ஒன்று களவாடிச் சென்ற நபரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

இந்த சந்தேக நபர் தொடர்பான காணொளிகள் வெளியிடப்பட்டுள்ளன. காரை திருடிய நபர் வேகமாக தப்பி சென்றார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ரிச்மண்ட் ஹில் பகுதியில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. வேகமாக காரை செலுத்திய நபரை இடைமறித்த பொலிலிஸார், அவரை இருக்கைப்பட்டிய்சி அணியுமாறு அறிவுறுத்தியுள்ளனர்.

இருக்கை பட்டியை அணிந்த நபர், வாகனத்தை நிறுத்தாது வேகமாக தப்பிச் சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

20 முதல் 30 வயது மதிக்கத்தக்க நபர் ஒருவரே இவ்வாறு வாகனத்தைக் களவாடிச் சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.



silver2006 Infiniti M35X ரகத்தில் ATPY666 என்ற இலக்க வாகனமே இவ்வாறு களவாடப்பட்டுள்ளது.

இந்த வாகனத்தை அபகரித்த நபர் தொடர்பிலான விவரங்கள் தெரிந்தால் அறிவிக்குமாறு பொலிஸார் கோரியுள்ளனர்.




# விமானப் பயண கட்டணங்கள் கல்கரி பகுதியில் அதிகரிக்கும்

## ஆலங்கட்டி மழை அனர்த்தத்தால் நிலைமை

கனடாவின் கல்கரி பகுதியில் விமான பயண கட்டணங்கள் அதிகரிக்கும் என தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பகுதியில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக – குறிப்பாக ஆலங்கட்டி மழை காரணமாக – பல்வேறு விமான பயணங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

பெரிய கொல்வ் பந்து அளவில் பெரிய பனிக்கட்டிகள் விழுந்தன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் விமானங்கள் பயணம் செய்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. மேலும் சில நிறுத்தி வைக்கப்பட்டிருந்த விமானங்கள் இந்த ஆலங்கட்டி மழையினால் சேதம் அடைந்தன எனத் தெரிவிக்கப்படுகிறது.

வெஸ்ட்ஜெட் விமான சேவை நிறுவனம் கடந்த திங்கள் முதல் புதன்கிழமை வரையிலான காலப்பகுதியில் சுமார் 248 விமான பயணங்களை ரத்து செய்துள்ளனர்.

கல்கரியை மையமாகக் கொண்டு இயங்கி வரும் விமான சேவை நிறுவனங்கள் மேலும் 106 விமான பயணங்களை வியாழனும் வெள்ளியும் ரத்து செய்துள்ளன.

இவ்வாறு அதிக அளவில் விமான பயணங்கள் ரத்து செய்யப்பட்ட காரணத்தினால் விமான பயண கட்டணங்கள் அதிகரிக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக வரையறுக்கப்பட்ட விமான டிக்கெட்டுகள் காணப்படுவதனால் அதற்கான கிராக்கி அதிகரிக்கும் எனவும் இதன் மூலம் விமான பயண கட்டணங்கள் உயர்வடையும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

சீரற்ற காலநிலை காரணமாகவே இவ்வாறு அதிக எண்ணிக்கையான விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

# பெண் பொலிஸ் அதிகாரி பக்கச்சார்பாக செயற்பட்டார் என அவருக்கு எதிராக வழக்கு



கனடாவின் ரொறன்ரோவைச் சேர்ந்த சிரேஷ்ட பெண் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் பக்க சார்பான முறையில் செய்யப்பட்டார் எனக் குற்றம் சுமத்தி வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இந்தப் பெண் பொலிஸ் உத்தியோகத்தர், உறவினர் ஒருவருக்கு சார்பான வகையில் தனது கடமையை சரிவரச் செய்யத் தவறினார் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இன்ஸ்பெக்டர் ஜாய்ஸ் சர்டர்ஸ் என்ற உத்தியோகத்தரே கடந்த 2022 ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி இடம்பெற்ற வாகன விபத்து சம்பவம் ஒன்றின் போது இவ்வாறு நடந்து கொண்டார் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அந்த பொலிஸ் உத்தியோகத்தரின் உறவினர் வாகன விபத்தில் தொடர்பு பட்டிருந்த நிலையில் பொலிஸார் பூரண விசாரணைகளை நடத்த முன்னதாகவே விபத்துடன் தொடர்புடைய சாரதியை வீட்டுக்கு அவர் அனுப்பி வைத்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தொழில் ஒழுக்க நெறிகளை மீறி இவ்வாறு அந்தப் பெண் பொலிஸ் உத்தியோகத்தர் செயற்பட்டார் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. அந்தக் குற்றச்சாட்டுகளை அந்தப் பெண் பொலிஸ் உத்தியோகத்தர் நிராகரித்துள்ளார்.

இந்த வழக்கு விசாரணைகளின் போது கடமை தவறிய விடயம் தெரிய வந்துள்ளது எனக் கூறப்படுகின்றது.




# முன்பதிவு செய்து விட்டு வருகை தராமல் விடும் வாடிக்கையாளர்களுக்கு அபராதம் விதியுங்கள்!

## கியூபெர்க் மாகாண ஹோட்டல்களின் உரிமையாளர்கள் கோரிக்கை

ஹோட்டல்களை பதிவு செய்து, வருகை தராத வாடிக்கையாளர்களுக்கு அபராதம் விதிக்கப்பட வேண்டும் எனக் கனடாவின் கியூபெர்க் மாகாண ஹோட்டல்களின் உரிமையாளர்கள் கோரிக்கையை முன் வைத்துள்ளனர்.

கட்டுமானம் செலவு, பண வீக்கம், சம்பளக் கொடுப்பனவு உள்ளிட்ட பல்வேறு சவால்களை ஹோட்டல் துறை எதிர்நோக்கி வருவதாக உரிமையாளர்கள் சுட்டிக்காட்டி உள்ளனர்.

சில ஹோட்டல்களில் காணப்படும் ஆசனங்களை ஒதுக்கீடு செய்துவிட்டு இறுதி நேரம் வரையில் வருகை தர முடியாது என்பதை அறிவிக்காமல் விடுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு பதிவு செய்து இறுதி நேரம் வரையில் வருகை தர முடியாது என காரணத்தினால் பெரும் நஷ்டத்தைத் தாங்கள் எதிர் நோக்க நேரிடுவதாக ஹோட்டல் உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே இவ்வாறு அறிவிக்காது விடும் வாடிக்கையாளர்களுக்கு அபராதம் விதிக்கப்பட வேண்டும் என கோரப்பட்டுள்ளது.

வாடிக்கையாளர்களின் இந்த செயலினால் ஹோட்டல் ஒன்று சராசரியாக 47 ஆயிரம் டொலர்களை இழக்க நேரிடுவதாக தெரிவிக்கப்படுகிறது.

எனவே வாடிக்கையாளர்கள் முன்பதிவு தொடர்பில் நேர்மையாக செயல்படுவதனை உறுதி செய்ய வேண்டும் என ஹோட்டல் உரிமையாளர்கள் கூறியுள்ளனர்.

அவ்வாறு நேர்மையாக செயல்படத் தவறும் வாடிக்கையாளர்கள் மீது அபராதம் விதிக்கும் சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

# 120 கிலோ கொக்கெய்ன் போதைப்பொருளுடன் கனடியத் தமிழர் அமெரிக்க எல்லையில் கைது!




120 கிலோ கிராமுக்கு அதிகமான கொக்கெய்ன் போதைப்பொருளுடன் இலங்கைத் தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த கனடிய தமிழர் ஒருவர் அமெரிக்க எல்லைப் பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அமெரிக்க சுங்க மற்றும் எல்லைப் பாதுகாப்பு மற்றும் உள்நாட்டுப் பாதுகாப்பு விசாரணைகள் பிரிவு அதிகாரிகள் போர்ட் ஹுரோனில் உள்ள ப்ளூ வாட்டர் பாலத்தில் இவர் ஓட்டிச் சென்ற டிரக்கில் இருந்து 266 இறாத்தல் (பவுண்டுகள்) கொக்கைனை கடந்த முதலாம் திகதி மாலை 4.30 மணியளவில் கைப்பற்றிய பின்னர் அவர் கைது செய்யப்பட்டார்.

42 வயதுடைய ட்ரக் சாரதியான ஜூலி சபேசன் சத்தியசீலன் என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார் என செயின்ட் கிளேர் கவுண்டி ஷெரிப் அலுவலகம் தெரிவித்துள்ளது

மோப்ப நாய்க் குழு மற்றும் எக்ஸ்ரே ஸ்கேன் ஆய்வு ஆகியவற்றின் மூலம் அவர் ஓட்டி வந்த டிரெய்லருக்குள் ஒரு பொய்யான சுவருக்குப் பின்னால் மறைத்து வைக்கப்பட்டிருந்த 100 கட்டிகள் சந்தேகத்திற்கிடமான போதைப்பொருள்கள் கண்டு பிடிக்கப்பட்டன என அமெரிக்க சுங்க மற்றும் எல்லைப் பாதுகாப்பு பிரிவுத் தகவல்கள் தெரிவித்தன.

# கிறின்பெல்ட் ஊழலில் ஒன்ராரியோ அரசின் பங்கு; தேசிய பொலிஸ் பிரிவினரின் விசாரணை ஆரம்பம்

**ஒன்ராறியோ, ஓகஸ்ட் 10**

கிறின்பெல்ட் ஊழலில் ஒன்ராரியோ அரசாங்கத்தின் பங்கை தேசிய பொலிஸ் பிரிவு விசாரிக்க ஆரம்பித்துள்ளது.

ஒன்ராரியோ முதல்வர் டக் ஃபோர்ட் அலுவலகத்தில் தற்போது பணிபுரியும் அல்லது முன்னர் பணிபுரிந்தவர்களை தேசிய பொலிஸ் பிரிவு அதிகாரிகள் விசாரிக்க ஆரம்பித்துள்ளனர்.

இந்தத்தகவலை ஒன்ராரியோ மாகாண அரசாங்கம் உறுதிப்படுத்தியுள்ளது.

பாதுகாக்கப்பட்ட கிறின்பெல்ட் நிலங்கள் குறித்த டக் ஃபோர்ட் அரசாங்கத்தின் முடிவு குறித்த விசாரணையின் ஒரு பகுதியாக தேசிய பொலிஸ் பிரிவு இந்த நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது.

ஆனால் டக் ஃபோர்ட் இதுவரை விசாரணைக்கு உட்படுத்தப்படவில்லை எனத் தெரியவருகிறது.

கிறின்பெல்ட் ஊழலுக்கும் தனக்கும் எந்த தொடர்பும் இல்லை என ஒன்ராரியோ முதல்வர் டக் ஃபோர்ட் தொடர்ந்தும் தெரிவித்து வருகிறார்.

ஒன்ராரியோ மக்களுக்கு இது ஒரு சோகமான நாள் என இந்த விசாரணை குறித்து லிபரல் கட்சியின் தலைவர் பொனி குரோம்பி கூறினார்.

# கனடாவின் கரையோரப் பகுதிகளில் எரிபொருள்களின் விலையில் வீழ்ச்சி



**நோவா ஸ்கோச்சியா, ஓகஸ்ட் 10**

கனடாவின் கரையோரப் பகுதிகளில் எரிபொருள்களுக்கான விலையில் வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

கனடாவின் கரையோரப் பகுதிகளான நோவா ஸ்கோச்சியா, பிரின்ஸ் எட்வர்ட் தீவு மற்றும் நியூ பிரவுன்ஸ்விக் ஆகிய பிராந்தியங்களில் இவ்வாறு எரிபொருள்களின் விலைகள் குறைவடைந்துள்ளன.

குறிப்பாக பெற்றோலின் விலை குறைவடைந்துள்ளது.

நோவா ஸ்கோச்சியாவில் ஒரு லீற்றர் பெற்றோலின் விலை 2.4 சதங்களினால் குறைவடைந்துள்ளது.

இதன்படி ஒரு லீற்றர் பெற்றோலின் விலை 168.8 சதங்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

டீசலின் விலையும் குறைவடைந்துள்ளது. பிரின்ஸ் எட்வர்ட் தீவுகளில் ஒரு லீற்றர் பெற்றோலின் விலை 2.3 சதங்களினால் குறைவடைந்தது.

அங்கு 173.5 சதங்களுக்கு விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, நியூ பிரவுன்ஸ்விக் பகுதியில் ஒரு லீற்றர் பெற்றோலின் விலை இரண்டு தசம் நான்கு சதங்களினால் குறைவடைந்து.

170 சதங்களுக்கு ஒரு லீற்றர் பெற்றோல் விற்பனை செய்யப்படுகின்றது.